# கருத்தூண்

10 YEARS

2005 Foundation for Library Awareness 2015

# சிறப்பு மலர்

## 2005 - 2015

சேமமடு

நூலக விழிப்புணர்வு நிறுவகம்

FOLA

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்தலைப்பு | : | *கருத்தூண்: 10வது ஆண்டு சிறப்புமலர்* |
| மலராசிரியர்கள் | : | *க.சௌந்தரராஜசர்மா, தெ.மதுசூதனன்* |
| பதிப்புரிமை © | : | *நூலக விழிப்புணர்வு நிறுவகம்* |
| பொருள் | : | *நூலக தகவல் அறிவியல்* |
| பதிப்பாண்டு | : | 2016 |
| எழுத்து | : | 11 |
| படிகள் | : | 500 |
| அட்டை வடிவமைப்பு | : | *சௌ. ஸ்ரீஹர்ஷன் (0766966100)* |
| அச்சுப்பதிப்பு | : | சேமமடு பதிப்பகம் |
| வெளியீடு | : | நூலக விழிப்புணர்வு நிறுவகம்,சேமமடு புத்தகசாலை |
| பக்கங்கள் | : | xxii + 358 |
| அளவு | : | 176x250 |
| ச.நி.நூ.எ.(ISBN) | : | 978-955-685-039-0 |
| அன்பளிப்பு/ விலை | : | 1000/- |

| | | |
|---|---|---|
| Title | : | Karuththoon |
| Authors | : | K.Saundarajasarma, T.Mathusoothanan |
| Copyright © | : | **Foundation for Library Awareness** |
| Edition | : | 2016 |
| Font Size | : | 11 |
| Cover Design | : | S.Sriharshan (076 6966 100) |
| Printed by | : | Chemamadu Puththakasaalai, Colombo -11<br>Tel:011-2472362, 0777 345 666 |
| Published by | : | **Foundation for Library Awareness**<br>Chemamadu Puththakasaalai |
| Pages | : | xxii + 358 |
| Size | : | 176x250 |
| ISBN | : | 978-955-685-039-0 |
| Price | : | 1000/- |
| CBCN | : | 2016-04-01-141 |


### கருத்தூண் பொருள் விளக்கம்

**கருத்தூண் என்ற தலைப்பு மூன்று விதமாகப் பொருள் கொள்ளத்தக்கது.**

1. கரு+தூண் *(Pillers of Ideas)*: படைப்புக்களின் கருத்துருவாக்கமானது ஆய்வை அடிப்படையாகக் கொண்டிருக்கும் தன்மை.
2. கருத்து+ஊண் *(Food for thought)* : கருப்பொருளை வெளிப்படுத்தும் பாணி மிக மிக எளிமையாக அனைவருக்கும் இலகுவாக செரிக்கும் (புரியத்தக்க) வகையில் கொண்டிருக்கும் தன்மை.
3. கரு+தூண்: கருத்துக்களின் பிரசவம், கருத்துத் திணிப்பின்றி கருவைச் சுமக்கும் பெண்ணினத்துக்குரிய மென்மை, நேர்த்தி, ஒழுங்கு, சார்பற்ற தன்மை போன்றவற்றைக் கொண்டிருக்கும் தன்மை.

# பொருளடக்கம்

**மலர் மலர விதையிட்டு மரம் வளர்த்தோர் முதலுரைகள்** vii

- நிறுவுனர் உரை ix
- மலராசிரியர் உரை xi
- வெளியீட்டுரை xii

**மலர்ந்த மலர் சிறக்கவென வாழ்த்தி நிற்போர் விதப்புரைகள்** xiii

- வட மாகாண கௌரவ முதலமைச்சரின் வாழ்த்துரை xiv
- வட மாகாண கல்வி அமைச்சரின் வாழ்த்துரை xvi
- யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் வாழ்த்துரை xvii
- Message from the Director General, National Library and Documentation Services xviii
- Message from the President (SLLA ) xix
- வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் வாழ்த்துரை xx
- யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரின் வாழ்த்துரை xxi
- Message from the Chief Librarian of the Colombo Public Library xxii

**முளை அரும்பி மொட்டாகி மலரான அதிசயங்கள்** 01

- நூலக விழிப்புணர்வு நிறுவகம் 03
- පුස්තකාල දැනුම්වත් කිරීමේ පදනම 06
- Foundation for Library Awareness 08
- நூலக விழிப்புணர்வு நிறுவகம் : செயற்பாட்டறிக்கை-2005-2015 10
- நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின்பணிகள்: கால ரீதியான ஒரு பார்வை 16
- 2005 වසරේ සිට 2015 වසර දක්වා FOLA 19
- FOLA over the years 2005-2015 22
- நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் நிறைவேற்றுக்குழு 2005 25
- நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் நிறைவேற்றுக்குழு 2015 26

**மொட்டவிழ்ந்த மலரிதழாய் நூலகம் சார் கட்டுரைகள்** 27

- சுயகற்றலுக்கு வாய்ப்பளிக்கும் நூலகங்களில் மையம் கொள்ள வேண்டிய இலங்கையின் கல்வித்துறை: பின்லாந்தின் கல்விமுறை தரும் புதிய சிந்தனை - *அ.ஸ்ரீகாந்தலட்சுமி* 28
- முன்பள்ளிகள்: மனிதப்பண்புகளின் வளர்ப்புப் பண்ணைகள் - *ஏ.சி. அன்வர் சதாத்* 33
- யாழ் பொதுசன நூலக சிறுவர் பகுதி : அன்றும் - இன்றும் - *ஜெயலட்சுமி சுதர்சன்* 39
- இலங்கையில் நூலகக் கல்வி: ஓர் வரலாற்று நோக்கு - *விசாகரூபன் மைதிலி* 42
- புனரமைப்பிற்குப் பின்னர் புதுப்பொலிவு கொள்ளும் யாழ்ப்பாணப் பொது நூலகம் - *சுகந்தி சதாசிவமூர்த்தி* 47
- யாழ்ப்பாணப் பொதுசன நூலக மறுமலர்ச்சியில் நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் பங்களிப்பு - *சபாரட்ணம் தனபாலசிங்கம்* 53

- கொழும்பு பொதுநூலகமும் வாசகர் சேவையும் - *ம.இந்திராணி* 60
- சமுதாய வளர்ச்சியில் பொதுநூலகங்களின் பங்கு - *வி.பிரபாகர்* 65
- பொதுநூலகங்களின் தோற்றமும் வளர்ச்சியும் பயன்பாடும் - *செல்வராணி பாக்கியநாதன்* 69
- வடமராட்சிக்கு வளம் சேர்க்கும் பாரதிதாசன் படிப்பகம் - *கு. சரவணன்* 73
- அரியாலையில் கலையும் கல்வியும் விளையாட்டும் மேலோங்கி நிற்கும் ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் - *இ.மதிகரன்* 76
- சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் - *அ.சுபாசினி* 78
- KOHA-இலகுவான தகவல் அணுகுகைக்கான நூலக தன்னியக்கமாக்கக் கணிமம் - *சி. கேதீஸ்வரன்* 80
- பாடசாலை நூலகமும் ஆசிரிய நூலகரும் - *க.ஜெயசோதி* 84

**இதழிடையே வா(சிப்பின்) சனையாய் மணம்பரப்பும் கட்டுரைகள்** 85

- Contribution of University Library to the Development of Society: An experience from University of Moratuwa - **Mrs. R.C.Kodikara** 86
- யாழ்ப்பாணத்தில் ஏட்டுப் பிரதிகளின் தோற்றமும் பயன்பாடும் - *எஸ்.ஜெபநேசன்* 88
- ஊடகங்கள்: நூலகம்சார் தகவல் தேடலும் ஆய்வும் - *சி. ரகுராம்* 95
- வாசிப்புப் பண்பாடும் நூலக விழிப்புணர்வு நிறுவகமும் -*சபா ஜெயராசா* 102
- தகவல் சேகரிப்பில் நூல்களின் முக்கியத்துவம் - *ம. ந. கடம்பேஸ்வரன்* 108
- வாசித்தலின் அவசியம் - *கு. நர்மதா* 111
- சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் - *தெ.மதுசூதனன்* 113
- தெளிவு - *எம். சிறீபதி* 125
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக வாசகரும் அவர்களின் தேடல் நடத்தைகளும் - *எஸ்.பத்மநாதன்* 128
- தகவல் உலகில் பழந்தமிழின் தலைநிமிர்வு -(சிந்தாமணி நிகண்டு மின்-அகராதி) - *சு.நவநீதகிருஷ்ணன்* 133
- 18ம் நூற்றாண்டில் அச்சுக்கலை அறிமுகமும் பதிப்பு முயற்சிகளும் - ஒரு பொதுப் பார்வை - *கணேசபுத்திரன்* 136
- கல்வி - மொழிபெயர்ப்பு பிறை 140

**அழகுமலர் பனித்துளியாய் பரிசுபெற்ற மைத்துளிகள்** 141

**முதற்பரிசுக் கட்டுரைகள்**

- நல்ல புத்தகங்கள் நல்ல எண்ணங்களை வளர்க்கும் - *சி.றொசின்ரன்* 143
- வெற்றிகரமான வாழ்க்கைக்கு வாசிப்பின் அவசியம்: நூலகங்களும் மாணவரின் பயன்பாடுகளும் - *ரவிநந்தா பவதாரணி* 146
- அறிவுலகின் நுழைவாயில் - *நாகரத்தினம் தர்ஷிகா* 150
- "வாசிப்பும் சமூக மேம்பாடும்" - *தர்ஷினி எட்வேட் ரவீந்திரராஜா* 156

**முதற்பரிசுக் கவிதைகள்**

- சிறுவர்களின் மகிழ்வகம் - *சி.டனுசியன்* 161
- அறிவுத் தீபம் - *சுகிர்தா* 162

## மலர்க்குழு

திருமிகு. ஆ.சபாரட்னம்

கலாநிதி. சி. ரகுராம்

கலாநிதி. மைதிலி விசாகரூபன்

பண்டிதர். ம. ந. கடம்பேஸ்வரன்

திருமிகு. எஸ்.தனபாலசிங்கம்

திருமிகு.ஆ.பாலச்சந்திரன்

திருமிகு. க.சௌந்தரராஜசர்மா

திருமிகு. தெ.மதுசூதனன்

# ஊடகங்கள் : நூலகம்சார் தகவல் தேடலும் ஆய்வும்



**எஸ்.ரகுராம்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
ஊடகக் கற்கைகள், யாழ் பல்கலைக்கழகம்.
*ragunadu2003@yahoo.com*

## அறிமுகம்

மானுட தொடர்பாடலின் பிரதான இலக்குகளாக அமைபவை பொழுதுபோக்கு, கல்வியூட்டுதல், தகவளித்தல், இயக்கவைத்தல் எனப் பொதுவில் கூறப்படுகின்றது.

இவற்றில் "தகவலளித்தல்" - மனித் வளர்ச்சியில் தொடர்பாடல் பெறும் தனித்துவமான முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்கிறது. பொழுதுபோக்கு கல்வியூட்டுதல், இயக்கவைத்தல் வேறு வழிமுறைகளாலும் முன்னெடுக்கப்படும் வாய்ப்புக்கள் உள்ள நிலையில் - "தகவலளித்தல்" தொடர்பாடலின் வழியேதான் சாத்தியப்படும் என்ற வகையில், அதன் சிறப்பை நவீன தொடர்பியலாளர்கள் அதிகம் உணர்ந்திருந்தனர். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரான காலப் பகுதியில் இந்த முக்கியத்துவம் அதிகம் பேசப்பட்டது.

சுயாதீனமான தகவல்கள் கிடைப்பதென்பதன் சமூக விளைவானது மனிதனை விடுவிப்பதே அன்றி, அவனைக் கையாளலுக்குட்படுத்துவதல்ல. அங்கு, அவன் புறக்கணிப்பிலிருந்தும் விடுவிக்கப்படுகிறான். இந்த அடிப்படையில்தான், மனித உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை "தகவலறிதல் என்பது அடிப்படை உரிமைகளுள் ஒன்று" எனச் சொல்கிறது.

## தொடர்பாடலும் ஊடகங்களும்

தொடர்பாடல் மக்களுக்கானதாக இருந்தாலும் - அந்தத் தொடர்பாடலை எதிர்கொள்ளும் தன்மையை அந்த மக்களின் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுச் செல்வாக்குகள் பெருமளவில் தீர்மானித்துக் கொள்கின்றன.

இது ஒருவகையில், தொடர்பாடலின் அல்லது ஊடகங்களின் வீச்சை, மக்கள் மத்தியிலிருந்து தடுத்துக்கொள்ளும் இயல்பான தற்காப்புப் பொறிமுறையாகவும் (*Defensive mechanism*) கருதமுடியும்.

ஊடகங்களிலிருந்து பெறப்படும் செய்திகளை அப்படியே தமக்குள் உள்வாங்குபவர்களாக மக்கள் இருந்ததில்லை. ஊடகங்கள் சொல்வது எதுவாயினும், அது மக்கள் சார்ந்துள்ள பண்பாடு, வர்க்கம், இனம், பாலினம், கருத்தியல் அடிப்படையிலேயே மக்கள்வசம் உள்ளீர்த்துக் கொள்ளப்படும். திட்டமிடப்பட்டு அர்த்தம் கொள்ளும் வகையில் உருவாக்கப்படும் எந்தச் செய்தியும் - பகுதியாக ஏற்றுக் கொள்ளப்படுதல், தமக்கேற்ற வகையில் உருகித்துக் கொள்ளுதல் நிராகரிக்கப்படுதல் என்ற நிலைப்பாடுகளைச் சந்திக்கவே வேண்டிவரும்.

இந்தவகையில், ஊடகங்கள் தமது வெளியீடுகளுக்காக தகவல்களைத் திரட்டுவதும் அந்தத் தகவல்களை முகாமைத்துவம் செய்வதும் வெறுமனே கிடைக்கும் தகவல்களைச்

செய்திகளாக்கும் செயன்முறையையும் கடந்ததாக, அதன் தீவிரத்தன்மையை ஊடகங்கள்மத்தியில் உணர வைத்திருக்கிறது. இயல்பூக்கமும், தகவல்களை பகுத்தறிந்து ஆராயும் பண்பும் மேனிலைப்பட்ட வாசகர்கள், பார்வையாளர்கள், நேயர்கள் முன்னிலையில் ஊடகங்களின் வெளிப்படுத்தல்கள் மிகுந்த விமர்சனப் பார்வைகளுடனேயே அணுகப்படுவதை இன்று ஊடக ஆய்வாளர்கள் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

உலகமயமாக்கத்தின் பல்வேறு விளைவுகளில் சிலவாக தகவல் பெருக்கமும், தகவல்களை பெற்றுக்கொள்ளும் வல்லமையும் எளிமைப்படுத்தப்பட்ட இன்றைய காலப்பகுதியில் ஊடகங்களின் செய்தி வழங்கும் பணி முன்பு போல அன்றி வலிமையான சவால்களுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

ஊடகங்கள் சூழ்ந்த இன்றைய உலகில் வாசகர்கள், பார்வையாளர்கள், நேயர்கள் என எவராயினும் ஊடக நுகர்வில் தேர்ச்சிபெறுதல் என்பது இயல்பான, சிறுபராயம் தொட்டு வளரும் மானுட அடிப்படை உணர்வுகளில் ஒன்றாகக் கருதப்படுமிடத்தும், தமக்கு வேண்டிய தகவல்களைப் பெறுவதில், ஊடகத் தேர்வை தாமே மேற்கொள்ளும் வாய்ப்புக்களை வாசகர்கள், பார்வையாளர்கள், நேயர்கள் கொண்டிருப்பதும் அத்தகைய தேர்வுக்குப் பொருத்தமான போட்டி ஊடகங்கள் நிறைந்த ஊடக உலகம் இன்று அவர்களுக்கு கைவரப் பெற்றிருப்பதும் ஊடகங்கள் தமக்கான செய்திகளுக்கு தகவல்களைச் சேகரிப்பதிலும் அவற்றைச் செய்திகளாக அறிக்கையிடுவதிலும் மாற்றங்களை உருவாக்கியிருக்கிறது.

ஊடகங்களும் சரி, அவற்றில் பணியாற்றக்கூடிய ஊடகவியலாளர்களும் சரி கிடைக்கும் தகவல்களை அறிக்கையிடுதல் என்பதே ஊடகவியலாகும் எனத் தமது பணியின் வீரியத்தையும் தாக்கத்தையும் தாமே குறைத்து மதிப்பிட்டதான காலம் தற்போது மாறிவிட்டது என்பதே இப்போது உண்மையானதாகும்.

ஊடகவியல் பணியின் தாக்கம் என்பது அதன் தொழில்சார் விருத்தியுடன், அதன் வீச்சுடன் இன்று அளவிடப்படுகிறது. ஊடகவியலாளர்கள் தமது செய்திகளுக்கான தகவல் சேகரிப்பை அல்லது தகவல் திரட்டலை முன்னாயத்துடன் திட்டமிடலுடன் ஆழமாகச் செய்ய வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருப்பவர்களாகவே இன்று பொதுத் தரப்புக்களில் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

### ஊடகங்களும் தகவல் உலகமும்

தகவல்கள் இன்று உலகமயமாதலின் பேறாக - எவருக்கும் எவ்வேளையிலும் அணுகப்படக்கூடியதாக இருந்தாலும், தகவல்களின் ஆழமும் தரமும் - திறன், தூரதம், புத்தாக்கம் எனத் தகவல் திரட்டுபவர்களின் ஆளுமையில் அவை தங்கியிருப்பதையும், தகுந்த தகவல் மூலங்களின் உதவியும் அனுசரணையும் அதன் மையமாக இருப்பதையும் எவரும் மறுக்க முடியாது.

இந்த வகையில், தகவல் மையங்களின் முதற்தெரிவாக அமையும் நூலகங்களின் ஊடகப் பணிசார் பயன்பாடும் வழிகளும் கவனத்திற்குரியனவாகின்றன.

அதேவேளை தகவல் தேடலுக்கு அவை கொண்டிருக்கக்கூடிய ஊடகப்பணிசார் பொருந்து நிலைகளும் சவால்களும் பரிசீலனைக்குட்படுத்தப்பட வேண்டிய தேவையும் எழுந்திருக்கிறது.

ஊடகப் பணியை தொழில்சார் நிலையில் வரித்துக்கொள்ளும்போது, அது அதன் நாளாந்தச் செயற்பாடுகளா செய்தியை சேகரித்தல், செய்தியை உருவாக்குதல், செய்தியை விநியோகித்தல் ஆகிய நிலைகளில் முன்வைக்கப்படுகிறது.

இங்கு நூலகங்களின் அனுசரணையானது இந்த மூன்று நிலைகளிலும் முத்தியத்துவம் இடம்பெறுகிறது.

**செய்தி சேகரித்தல்**

செய்தி சேகரிப்பு பொதுவான அபிப்பிராயத்தில் தகவல்களைச் சேகரிப்பது எனப் புரிந்துகொள்ளப்பட்டாலும், அடிப்படையில் தொழில்சார் நேர்த்தியுடனான செய்தி சேகரித்தல் என்பது அதனிலும் ஆழமான அர்த்தங்களைத் தருவதாக அமைகிறது.

இதன்படி, செய்தி சேகரிப்பு என்பது வெறுமனே தகவல் சேகரிப்பு என்னும் செயற்பாட்டைக் கடந்ததாக, குறித்த பிரச்சினை அல்லது தகவற் சூழல் பற்றிய இயலுமான பின்னணி அறிவுடன் முன்னெடுக்கப்படும்போதே அவ்வாறான செய்தி சேகரிப்பு முழுமையானதாக அமையும் என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகிறது.

இதற்கு அடிப்படையாக அமைவது, குறித்த பிரச்சினை அல்லது தகவற் சூழல் பற்றிய ஆய்வு அல்லது தேடலாகும். மிகப் பெருமளவிலான ஊடகவியலாளர்கள் இதனை தமது கடப்பாட்டிற்கு அப்பாற்பட்ட அல்லது நவீன ஊடகத்துறையின் நுனிப்புல் மேயும் போக்குகளின்பேரிலான செய்தி சேகரிப்பிற்கு அவசியமற்ற ஒன்றாகக் கருதிக் கொண்டாலும், திறன்வாய்ந்த செய்தி சேகரிப்பின் அடிப்படையாக இந்த ஆய்வும் தேடலும் அமைவதை தொழில்சார் நேர்த்திக்காகப் பெயரும் விருதுகளும் பெற்ற ஊடகவியலாளர்கள் அதனை முதற்பொருளாக முன்வைப்பதோடு, அதனைத் தமது பணியின் பெருமையாகவும் கருதுகின்றனர்.

ஊடகவியல் துறையில் குறிப்பிடத்தக்க சாதனை முயற்சிகளுக்கு வழங்கப்படும் "புலிட்சர்" விருது பெற்ற அமெரிக்க நாளிதழான *'New Orleans Tines Picayune'* இன் செய்தி ஆய்வுகளுக்கான பணிப்பாளர் நான்ஸி புரீட்ஸ் *(Nancy Burris, New Research Director)* செய்தி ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்காவிட்டால், பின்னணித் தகவல்கள் முறையாகச் சேகரிக்கப்படாது விட்டிருந்தால் தம்மால் "புலிட்சர்" விருதை வென்றிருக்க முடியாது என்கிறார்.

உண்மையில் தொழில்சார் நேர்த்தியும் நேர்மையான அறிக்கையிடலும் இலக்காகக் கொண்ட ஊடகவியலாளர்களுக்கு அத்தகைய ஆய்வும் தேடலும் சுமையானதாக அன்றி அது தமது அறிக்கையிடலை வளப்படுத்தக்கூடிய சுவாரசியமான முயற்சியாகவே அமையும் என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்படக் கூடியதாகும்.

அவ்வாறான ஆய்வுக்கும் தேடலுக்குமான களமாக அல்லது உதவுதளமாக அமையக்கூடிய நூலகங்கள் அல்லது தகவல் மையங்கள் ஊடகவியலாளர்களின் உசாத்துணைகளுக்கு மிகக் கணிசமான பங்காற்றுதல்களை வழங்கக்கூடியனவாகும்.

பாரம்பரிய நூலகங்கள் அல்லது தகவல் மையங்களெனில் ஒருமித்த பௌதிகவெளியிலும் அல்லது இணைய நூலகங்கள் அல்லது தகவல் மையங்களெனில் அணுகப்படக்கூடிய இணையவெளியிலும் அமைந்திருப்பது வீண்விரயமற்ற ஆய்வுக்கும் தேடலுக்கும் இந்தவகையில் வலுச்சேர்ப்பதாகும். ஆனால், அத்தகைய நூலகங்கள் அல்லது தகவல் மையங்கள் கொண்டிருக்கக் கூடிய செயற்பாட்டுப் பொறிமுறைகளுக்கும், ஊடகவியலாளர்களின் தேவைகளுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் இடையிலான பொருந்தாதநிலைகளும் சவால்களும் இங்கு இல்லாமலில்லை.

ஊடகவியலில் குறிப்பாக, கணத்திற்கு கணம் வெளிப்படுத்தப்பட வேண்டிய செய்தி ஊடகங்களின் இயக்க முறையாகும். துரிதமும் மாற்றங்களும் இலக்குக்

கொண்ட ஊடகப்பணிகளில் ஆய்வுக்கும் தேடலுக்குமான அனுசரணையை வழங்கப் போதுமான அல்லது ஒத்துழைக்கப் போதுமான பொறிமுறைகளை நூலகங்கள் அல்லது தகவல் மையங்கள் கொண்டிருக்கினறனவா என்பதும், ஊடகவியலாளர் களுக்கு அவசியமான அல்லது தேவையான தகவல்களுக்கும் நூலகங்கள் அல்லது தகவல் மையங்களில் அமைந்திருக்கக்கூடிய அல்லது வாய்ப்பாயிருக்கின்ற தகவல் களுக்கும் இடையிலான சமநிலையற்ற போக்கும் இந்தவகையில் முக்கியமானவையாகும்.

பொது நூலகங்கள் அல்லது கல்விசார் செயற்பாடுகளுக்கான நூலகங்கள் கொண்டுள்ள தகவல் மூலங்கள் எண்ணிறைந்தவையாகவும் பல்பரிமாணங்களிலும் அமைகின்றபோதும், அவை ஊடகப்பணிகளில் ஈடுபடும் தொழில்சார் ஊடகவியலாளர்களின் துரித தேவைகளை நிறைவேற்றுவதற்கும், சாதாரண பணிநேரங்கள் கடந்தும் சேவைகளை வழங்குவதற்கும் ஏற்ற இயங்குமுறைகளைக் கொண்டிருக்கின்றனவா என்பது விவாதத்திற்குரியது.

இதற்கு நடைமுறைசார் சவால்களை ஈடுகட்டும் ஓர் தீர்வாக, ஊடக நிறுவனங்களில் அமையக்கூடிய நூலகங்கள் அல்லது தகவல் மையங்கள் கருத்திற் கொள்ளப்படமுடியும். ஒருவகையில், தொழில்சார் ஊடகவியலின் வளர்ச்சிப்போக்கின் ஒரு கட்டமாகவும், ஊடக நிறுவனங்களில் அமையக்கூடிய இந்த நூலகங்கள் அல்லது தகவல் மையங்கள் இந்தப் போதாமைகளை காலப்போக்கில் நிவர்த்திக்கவும் முடியும்.

இது நூலகங்கள் அல்லது தகவல் மையங்கள் ஊடகப் பணிகளின் தேவைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்குமான துரித அணுகுதல், எவ்வேளையிலுமான சேவை வாய்ப்பு ஏலவே இருக்கக்கூடிய அல்லது வாய்ப்பாயிருக்கின்ற தகவல்களுடன் ஊடகப்பணியின் தேவைகளின்பாலான தகவல்களையும் வழங்கக்கூடிய பொறிமுறையை நடைமுறைச் சாத்தியமாக்கும்.

இங்கு ஊடக நிறுவனம்சார் நூலகங்கள் அல்லது தகவல் மையங்கள் பின்வரும் கரிசனைகளையும் கொண்டிருக்க முடியும்.

- தகவல் ஆவணங்களை மாத்திரம் வழங்கக்கூடிய, ஆவணங்களை வழங்குவதும் மீளப்பெறுவதுமான பொறிமுறைக்கு மாத்திரம் பழக்கப்பட்ட "தகவல் வாயிற்காப்பு" *(Informationgate keeping)* பணியிலிருந்து மாறுபட்ட, ஆய்வுக்கும் தேடலுக்குமான தகவல்கைளத் தேவைகளின்பால் வழங்குவதோடு, ஆய்வுக்கும் தேடலுக்குமான அனுசரணையையும் வழிகாட்டுதலையும் வழங்கக்கூடிய நூலகப் பணிக்கு இங்கு இடம்தரப்படலாம்.

- தகவல்களுக்கும் ஊடகவியலாளர்களுக்குமான இணைப்புப் பணியைச் செய்யக்கூடிய "தகவல் மத்தியஸ்தர்" *(Information Intermediates)* பணியும் இங்கு முதன்மைப்படுத்தப்படலாம். இந்த வகையில், தகவல் முகாமைத்துவத்தில் தேர்ச்சி பெற்ற நூலகர் ஒருவரின் துணையானது ஊடகத்துறையில் நாளாந்தம் குவியும் தகவல்களை வினைத்திறனுடனான முகாமைத்துவம் செய்யவும் அவற்றைப் பேணவும் உதவுவதோடு, அந்தத் தகவல்களைத் தேவைக்கேற்றவாறு துரிமாக அணுகுவதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பாக அமையும். ஏற்கனவே, இவ்வாறான பொறிமுறை, இலத்திரனியல் உடகத்துறையில் குறிப்பாக தொலைக்காட்சி நிறுவனங்களில் நடைமுறையில் இருந்தாலும், அது செம்மைப்படுத்தப்படுவதும், அச்சு ஊடகத் துறையிலும் இவ்வாறான கட்டமைப்புக்கள் பேணப்படுவதும் அவசியமானதாகும்.

பாரம்பரிய நூலக அடைவிலிருந்து மாறுபட்ட இணையவழித் தகவல்களை அடையாளம் காணலிலும் ஊடக நிறுவனம்சார் நூலகங்கள் அல்லது தகவல் மையங்கள் புத்தாக்கத்தை உருவாக்க முடியும். இணையம் வழியாக எண்ணிறைந்து

கிடைக்கின்ற தகவல்கள், ஒப்பீட்டளவில் ஆய்வுக்கும் தேடலுக்குமான பொருத்தம் கொண்டனவாக இருக்கின்றனவா என்பது ஆய்வில் ஈடுபடுவோர் சந்திக்கக்கூடிய நடைமுறைச் சவாலாகும். இது காலச் செலவீனத்தைக் கொண்டது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. இந்தவகையில் ஊடக நிறுவனம்சார் நூலகங்கள் அல்லது தகவல் மையங்கள் பொருத்தம் கருதியதும் நம்பகத்தன்மையும் கொண்ட மூலகங்களை அடையாளம் காண்பிப்பதில் தொழில்சார்ந்து நேரத்துடன் போராடும் ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டியாக மாறமுடியும். இது ஊடகவியலாளர்களின் தனித்துவத்தைப் பாதிக்கும் அல்லது அவர்களை தங்கு நிலையாளர்களாக்கும் செயற்பாடு எனக் கருத இடமுண்டானாலும், செய்தி சேகரிப்பும் அதற்கான ஆய்வும் தேடலும் குழுசார் முயற்சியாக அமையும்போது அல்லது தேர்ச்சிபெற்ற நூலகர் ஒருவரின் வழிகாட்டுதல் கிடைக்கப்பெறும்போது அங்கு பெறுதிகள் பல்வேறு பரிமாணங்களையும் பார்வைகளையும் பிரதிபலிப்பதோடு, தகவல்களின் செல்லுபடித்தன்மையையும் நம்பகத்தன்மையையும் பரிசீலிக்க வாய்ப்பும் அதிகரிப்பது செய்திகளை மெருகூட்டவும் துல்லியமாக்கவும் உதவும் என்பதையும் இங்கு கவனத்திற் கொள்வது பொருத்தமானதாக அமையும். அடிப்படையில், ஊடக நிறுவனம்சார் நூலகங்கள் அல்லது தகவல் மையங்களின் நூலகரின் எதிர்பார்க்கப்படும் பணியானது - முதற்குறிப்பிட்டபடி, வழிகாட்டியாக *(Tracker)* மாத்திரமன்றி - முதற்குறிப்பிட்டபடி, வழிகாட்டியாக *(Tracker)* மாத்திரமன்றி மதிப்பீட்டாளராகவும் *(Evaluator)* பயிற்சி வழங்குனராகவும் *(Trainer)* அமைவது இங்கு அதிகம் கரிசனைக்குரியது. இன்னமும் குறிப்பாகக் கூறப்புகின் ஊடகவியலாளர்என்பது "ஊடகவியலாளர்/ நூலகர்" என்ற இணைப்பாத்திரங்களின் சேர்க்கையாகவும் பிரேரிக்கப்பட முடியும். உலக அளவில் மாத்திரமன்றி, இலங்கையிலும், குறிப்பாக தமிழ் ஊடகவியற் பரப்பிலும் திறன்மிக்க ஊடகவியலாளர்களாக அல்லது ஊடகத்துறையினருக்கான வழிகாட்டிகளாக அமைந்தவர்களில் குறிப்பிடத் தகுந்தோர் நூலகப் பணிப் பின்புலத்தைக் கொண்டவர்களே என்பதும் இங்கு மறுப்பதற்கில்லை.

## செய்தி உருவாக்குதல்

செய்தி உருவாக்கம் அல்லது செய்தி தயாரிப்பு என்பது இன்று எழுத்துக்களை மாத்திரம் கொண்டமையாது புகைப்படங்கள், வரைபுகள், அட்டவணைகள் என்பவற்றையும் துணையாகக் கொண்டு அல்லது எழுத்துவழிக் கருத்துக்களுக்கு அவற்றின் மூலம் வலுச் சேர்த்து கொண்டே முன்னெடுக்கப்படுகின்றது.

அவ்வாறான செய்தி உருவாக்கத்தில், பொருத்தமான தகவல்கள் ஆய்வின் மூலமும் தேடலின் மூலமும் இணைக்கப்படுவது செய்தி சேகரிப்புக் கட்டத்தில் இடம்பெற்றாலும் சொல்லப்படும் விடயங்களுக்குப் பொருத்தமான வலுச் சேர்க்கக்கூடிய புகைப்படங்கள், வரைபுகள், அட்டவணைகள் செய்தி சேகரிப்புக் கட்டத்திலும் அதன் பின்னர் தேவையைப் பொறுத்து செய்தி உருவாக்கக் கட்டத்திலும் இணைக்கப்படுவது ஊடகப்பணியில் சாதாரணமாகக் காணக்கிடைப்பதாகும்.

இவ்வாறான முயற்சிகளுக்கு நூலகங்கள் அல்லது தகவல் மையங்களின் வழியாகக் கிடைக்கக்கூடிய தகவல் உதவிகளும் உசாத்துணைகளும் குறிப்பிடத்தகுந்தவை ஆகும்.

அதேவேளை வெளியிடப்படும் செய்திகளை தொடர்ந்து அவதானித்து வளர்ச்சி நிலைகளை அவை நேர்விளைவுகளாயினும் எதிர்விளைவுகளாயினும் தருவதும் ஊடகங்களின் அறநெறியாகும். அதேபோன்று தரப்படக்கூடிய செய்திகளைத் தொடரும் அல்லது தொடரவிரும்பும் வாசகர்களின், பார்வையாளர்களின், நேயர்களின் ஆர்வமும் கவனத்திற்குரியது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் முதற் தகவல்களைத் தொர்பறா வண்ணம் அடுத்த கட்டங்களில் தொடரவும், தொடர்விளைவுகளை உரிய பின்னணித்

தகவல்களுடன் அறிக்கையிடவும், தேவைப்படின் குறித்த செய்திகளுடன் இணையும் பிற விடயங்களின் போக்கை நுகர்வோருக்குத் தெரியப்படுத்தவும் ஊடக நிறுவனம்சார் நூலகங்கள் அல்லது தகவல் மையங்களின் பங்களிப்பு குறிப்பிடத் தகுந்ததாக அமையும்.

## செய்தி விநியோகித்தல்

உருவாக்கப்படும் செய்திகளை விநியோகிக்கும்போது, குறிப்பாக இணையவழிச் செய்தி விநியோகித்தில் நூலகத்தின் மிக முக்கிய பணியான ஆவணப்படுத்தலும் பிரதிகளைக் காலங்கடந்தும் அணுகுவதற்கான வாய்ப்புகளும் முக்கியமாகின்றன.

அச்சு ஊடகங்கள் அல்லது இலத்திரனியல் ஊடகங்கள் கொண்டுள்ள இருபரிமாண கட்டமைப்பிலிருந்து வேறுபட்டு இணையவழிச் செய்தித் தளங்கள் தமது செய்தி இணைப்பு வழியாக *(hyperlinks)* தொடர்புபட்ட வேறு செய்திகள் அணுகுவதற்கும், ஆவணப்படுத்தப்பட்ட முன்னைய பிரதிகளை அல்லது தொடர்புபட்ட ஆவணங்களை மீள்பார்வைக்குக் கொண்டு வரவுமான வாய்ப்புக்களைக் கொண்டுள்ள, அதன் முப்பரிமாணச் சிறப்பியல்பு இந்தவகையில் நூலகக் கட்டமைப்பின் ஒரு நீடிப்பாகின்றது *(hyperlinks)* தொடர்புபட்ட வேறு செய்திகளை அணுகுவதற்கும், ஆவணப்படுத்தப்பட்ட முன்னைய பிரதிகளை அல்லது தொடர்புபட்ட ஆவணங்களை மீள்பார்வைக்குக் கொண்டுவரவுமான வாய்ப்புக்களைக் கொண்டுள்ள, அதன் முப்பரிமாணச் சிறப்பியல்பு இந்த வகையில் நூலகக் கட்டமைப்பின் ஒரு நீடிப்பாகின்றது *(extended feature)* .

இது இன்னமும் ஒருபடிநிலை மேலே சென்று செய்தித்தளமொன்றுக்கு விஜயம் செய்யும் ஒருவாசகர், அந்த இணையத்தளத்தின் வழிகாட்டியாக அமையக்கூடிய தேர்ச்சி பெற்ற நூலகர் ஒருவரின் வழிகாட்டலுடன், மேலதிக வாசிப்பிற்காக அல்லது உசாத்துணைக்காக தொடர்புபட்ட வேறு இணையத்தளங்களை அணுகும் தேர்வுகளை அல்லது ஆலோசனைகளைப் பெறவுமான வாய்ப்பிற்கும் இட்டுச் செல்லக்கூடியதாகும்.

## தொழில்சார் தேவை கடந்தும்...

நூலகங்களுக்கும் ஊடகவியலுக்குமான இணைப்பு, தகவல்களைத் தேடும் அல்லது ஆராயும் தொழில்சார் தேவைகளையும் கடந்தும் உயிர்ப்புடனிருந்து வருகிறது.

பல்வேறு நாடுகளிலும் ஆக்கபூர்வமான வகையில் இது தொடர்பிலான புத்தாக்க முயற்சிகள் முன்வைக்கப்படுவதோடு, சில மேற்குநாடுகளில், நூலகங்கள் அடித்தள மக்களின் ஊடக வாசல்களாகவும் அவர்களின் ஊடகப் படைப்புக்களை வெளியுலகம் எடுத்துச் செல்வனவாகவும் செயற்பட்டு வருவதையும் அறியமுடிகிறது.

குறிப்பாக அமெரிக்காவில் சமூகச் செய்தியகங்களும் *(Community new srooms)* சாதாரண பொதுமக்கள் அணுகக்கூடிய தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புக் கூடங்களும் *(Public access television studion)* பொதுசன நூலகங்கள் சிலவற்றில் அமைக்கப்பட்டுள்ளன என்கிறார் அமெரிக்க நூலகங்களின் கூட்டமைப்பின் அறிவுசார் சுதந்திரத்துக்கான பணியகத்தின் இயக்குநரான பார்பரா ஜோன்ஸ் *(Barbara Jones - Director of American Libraries Associations' office for Intellectual Freedom) (2011 ).*

வெகுசன ஊடகத்துறையில் தமக்கான குரல்களுக்கு இடங்கிடைத்திராத சாமான்யர்களின் படைப்புக்கள் வெளிவரும் ஊடக வெளிப்பாட்டு வெளியாக நூலகங்கள் அமைவது, மாற்று ஊடகங்களுக்கான மற்றுமொரு களமாக நூலகங்களை அடையாளங்காட்டக்கூடியதாகும்.

இதேவேளை, இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் பேரூடகங்களுக்கு மாற்றாகப் பிரபலம் பெற்றுவரும் பொதுமக்கள் ஊடகவியல் அல்லது பிரஜைகள் ஊடகவியலில் *(Citizen Journalism)* ஆர்வம் காட்டும் இளவயதினரில் பெரும்பாலோர் வாசிப்பு ஆர்வம் மிக்கோராகவும் அதன்வழியே நூலகங்களை அடிக்கடி பயன்படுத்தும் தொகுதியினராகவும் இனங்காணப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கருத்துச் சுதந்திரத்தின் தளங்களாக நூலகங்களும் ஊடகப்பணியும் இணைந்து செயற்படக் கூடுமாவதை எடுத்துக்காட்டக்கூடிய வகையில் சில அமைப்புக்களும் இன்று உருவாகி வருகின்றன. உதாரணமாக, அமெரிக்கா *'Librarius' (a partnership between American Libraries Association's Public Library Association and American Public Media's Public Insight Network)* இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இதேவேளை ஊடகக் கற்கைகளை *(Master of Arts degree in Journlism)* தொடர விரும்பும் உயர்கல்வி மாணவர்களுக்கான இணைப்பட்டப்படிப்பாக *(dual master's degree)* "நூலகமும் தகவல் விஞ்ஞானமும்" *(Master of Arts in Library and Information Science), School of Journalism, University of Arizona* போன்ற சர்வதேச பல்கலைக் கழகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு இருப்பதும், இந்த பட்டப்படிப்புக்கான இணையத்தள வழிகாட்டு ஆவணத்தில் "பொதுத் தரவுத் தளங்களிலிருந்து தகவல்களைத் திரட்டிக்கொள்ளவும், அத்தகைய தகவல்களை விமர்சன ரீதியாக பகுப்பாய்ந்து கொள்ளவும், அதன் பேறுகளை மக்களுக்கு வழங்கவும் இக்கற்கை ஊடகவியலாளர்களுக்கு திறன்களை வழங்கும்" எனக் குறிக்கப்பட்டு இருப்பதும் உயர்கல்வித்துறையிலும் தொடர்ந்து தொழிலாற்றும் களங்களிலும் இந்தஇரு துறைசார் இணைப்பு ஒன்றுக்கொன்று அவசியமானவை என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

## முடிவாக

இந்த வகையில், இங்கு பிரதானமாகச் சுட்டிக்காட்டப்படுவது யாதெனில், தகவல்களைத் வழங்கக்கூடிய நூலகங்களுக்கும், தகவல்களின் தளத்திலேயே தமது உயிர்ப்பையும் இயங்குவிசையையும் கொண்டிருக்கக்கூடிய ஊடகங்களுக்குமான இடைவிலக முடியாத இணைப்பும், தங்குநிலையுமாகும்.

அந்தவகையில், இங்கு பிரேரிக்கப்பட்ட ஊடக நிறுவனம்சார் நூலகங்கள் அல்லது தகவல் மையங்களதும் இயக்கத்தின் கரிசனை கொள்ளக்கூடிய விடயதானங்கள் கருத்திற் கொள்ளப்படும்போது, இந்த இணைப்பு இன்னமும் விருத்தி கொண்டதாக அமைவதோடு அதன் விளைவுகளும் மேலும் பயனுறுதி கொண்டதாகும்.

## உசாத்துணை :


- '7 things you should know about Citizen Journalism', Retrieved from: www. educause.edu/el
- Barbara Jones (2011). Is the Line Between Librarianship and Journalism Blurring?, 'American Libraries', A Publication of the American Library Association
- Bella Mody (1991). Designing Messages for Development Communication : An audience participation-based approach, Sage Publications, New Delhi
- Media and Information Literacy (2015). A Publication on Celebrating connectivity across cultures, UNESCO
- Nora Paul (1997). Media libraries and new media, Net Media Conference seminar, Poynter Institute for Media Studies
- Online students' guide, School of Journalism, University of Arizona
- Santucci, Fabio Maria (2005). Strategic Communication for Rural Development, Development Communication Division, The World Bank